செ.வெ.எண்: 52/2021 நாள்: 29.06.2021

# திருப்பூர் மாவட்டம்

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான ஆணைக்கினங்க, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் மற்றும் மாண்புமிகு ஆதிதிராவிடர்நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் பின்னலாடை உற்பத்தி சங்கத்தினருடன் ஆய்வு கூட்டம் நடத்தினார்கள்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு முதன்மைச் செயலர் டாக்டர்.செல்வி.அபூர்வா, இ.ஆ.ப., அவர்கள், கைத்தறி மற்றும் துணிநூல் துறை முதன்மைச் செயலர்/ஆணையர், டாக்டர்.(திருமதி) பீலா ராஜேஷ், இ.ஆ.ப., அவர்கள், முதன்மை நிர்வாக அதிகாரி, காதி மற்றும் கதர்க்கிராம வாரியம் முனைவர்.பொ.சங்கர் இ.ஆ.ப., அவர்கள், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) திரு.த.பொன்.ராஜேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் மற்றும் மாண்புமிகு ஆதிதிராவிடர்நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் பின்னலாடை உற்பத்தி சங்கத்தினருடன் ஆய்வு கூட்டம் இன்று ( 29.06.2021) நடத்தினார்கள்.

***இக்கூட்டத்தில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தாவது***

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படி, திருப்பூர் மாவட்டத்தில், கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். அந்த வகையில் திருப்பூர் மாவட்டத்தில், கொரோனா தொற்று பாதிப்பு குறைந்து, இறப்பு விகிதம் குறைந்து வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த அமைச்சரவை கூட்டத்தில், அனைத்து அமைச்சர் பெருமக்களும் தங்கள் மாவட்டத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் போன்று செயல்பட்டு கொரோனா தொற்றின் பாதிப்பை குறைத்துள்ளதை பாராட்டினார்கள். கடந்த சில மாதங்களாக கொரோனா தொற்றினால் திருப்பூரில் பின்னாலாடை உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்தி குறைந்து பல லட்சம் தொழிலாளர்கள் வேலை இல்லாமல் பாதிப்புக்கு உள்ளான சூழ்நிலை தற்போது மாறி ஏற்றுமதி நிறுவனங்கள் 100 சதவீதமும், உள் நாட்டு உற்பத்தி நிறுவனங்கள் 33 சதவீதமும் இயங்கி வருகிறது. அனைத்து பின்னாலாடை உற்பத்தி சங்கத்தின் கோரிக்கைகளை பரிசீலித்து அதற்கு விரைவில் நல்ல தீர்வு கிடைக்கும். திருப்பூர் மாவட்டத்தை பொறுத்தவரை கொரோனா

நோய் தொற்றை தடுப்பதற்காக பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு நோய் தொற்றிலிருந்து முழுமையாக விடுபட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதே சூழ்நிலையினை பின்பற்றி விரைவாக தமிழகம் கொரோனா நோய் தொற்றில்லாத மாநிலமாக மாறும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் அனைவரும் மிகுந்த பாதுகாப்புடனும் மற்றும் விழிப்புணர்வுடனும் இருந்து கொரோனா நோய் தொற்றை தடுப்பதற்கு அரசு மேற்கொண்டு வரும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தங்களுடைய முழு ஒத்துழைப்பை தர வேண்டுமென மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.

***இக்கூட்டத்தில் மாண்புமிகு* கைத்தறி மற்றும் துணிநூல்துறை *அமைச்சர் அவர்கள் தெரிவித்தாவது,***

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான ஆணைக்கிணங்க கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் செயல்பாடுகள் குறித்து கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள பின்னாலாடை உற்பத்தி சங்கத்தினருடனான ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையிலே திருப்பூர் மாவட்டத்தில் கொரோனா பாதிப்பினால் பின்னாலாடை உற்பத்தி பாதிக்கப்பட்டதை தொடர்ந்து பின்னாலாடை உற்பத்தி சங்கத்தினரின் பல்வேறு கோரிக்கை மனுக்கள் அளித்துள்ளனர் அதனை விரைவில் பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார். திருப்பூர் கணபதிபாளையம் பருத்தி மற்றும் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கமானது, 12.09.1973ல் பதிவு செய்யப்பட்டு 19.09.1973 முதல் தொடர்ந்து நல்ல முறையில் செயல்பட்டு பருத்தி, கோரா காட்டன், மென்பட்டு ரக சேலைகள் உற்பத்தி செய்து வருகிறது. கடந்த 2020-2021ம் ஆண்டில் ரூ.577.30 இலட்சம் அளவிற்கு உற்பத்தி செய்யப்பட்டும் ரூ.601.23 இலட்சம் விற்பனை செய்தும், 2020-2021ம் ஆண்டில் ரூ.13.42 இலட்சம் உத்தேச இலாபம் ஈட்டியுள்ளது. திருப்பூரில் உற்பத்தியாகும் பின்னாலாடையினால் சர்வதேச அளவில் இந்திய நாட்டின் அந்நிய செலாவணி உயர்ந்து வருகிறது. பின்னலாடை நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவரும் மிகுந்த பாதுகாப்புடனும் மற்றும் விழிப்புணர்வுடனும் இருந்து கொரோனா நோய் தொற்று பாதிப்பு இல்லாத வகையில் பணிபுரிய வேண்டுமென மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, திருப்பூர் மாவட்டத்திலுள்ள பல்லடம் உயர் தொழில்நுட்ப நெசவுப்பூங்கா கடந்த ஏப்ரல் 2008 ஆம் ஆண்டு ரூ.22.17 கோடி மத்திய அரசு மானியத்துடனும், ரூ.4.98 கோடி தமிழ்நாடு அரசு பங்களிப்புடனும் மற்றும் ரூ.27.68 கோடி உறுப்பினர் பங்களிப்புடன் செயல்பட்டு வருவதையும், திருப்பூர் மாவட்டத்தில் அரசு நிதியுதவி பெற்று செயல்பட்டு வரும் அருள்புரம் பொது சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடுகள் குறித்தும், மற்றும் திருப்பூர் குமார்நகர், (கதர் கிராமத் தொழில்கள்) மண்டலத்துணை இயக்குநர் அலுவலக வளாகத்தில் செயல்படும் மத்திய கதர் கிடங்கில் இருப்பில் உள்ள கதர் மற்றும்

பாலியஸ்டர் இரகங்களை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆய்வு மேற்கொண்டு கதர் விற்பனையை விளம்பர படுத்த மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, கணபதிபாளையம் பருத்தி மற்றும் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் பருத்தி மற்றும் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்தை சேர்ந்த 60 கைத்தறி நெசவாளர்களுக்கு கைத்தறி ஆதரவுத் திட்டத்தின் கீழ் தலா ரூ.3,000/- மதிப்பில் ரூ.1,80,000/- மதிப்பிலான மின் மோட்டாருடன் கூடிய தார் சுற்றும் உபகரணங்களை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் மற்றும் மாண்புமிகு ஆதிதிராவிடர்நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.சாகுல்ஹமீது, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அலுவலர்கள், திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கம் நிர்வாகிகள், திருப்பூர் சாயச்சாலை உரிமையாளர் சங்க நிர்வாகிகள், சங்க உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**